
# ஆன்மீக அனுபவங்கள்



சிவ பாத சேகரன்



# முன்னுரை

மனித வாழ்க்கை நம்பிக்கையை முக்கிய அடிப்படையாக உடையது. கண்ணால் காண்பதைக் காட்டிக் காணமுடியாததைப் பற்றி நம்மைச் சிந்திக்க வைப்பது. இப்பிறவியில் நடக்கக்கூடியவைகளை மட்டும் எதிர் பார்த்து  நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பலர். அதற்கும் மேற்பட்ட ஒன்றில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் சிலர். பல்வேறு பிறவிகள் எடுத்துத் துன்பப்படும் உயிர்களிடம் இறைவன் காட்டும் கருணையினால் தெய்வம் உண்டு என்ற எண்ணம் உண்டாகிறது. இப்படிப்பட்டோரது தலைமுறைகள் வாழையடி வாழையாகத் தெய்வ நம்பிக்கையில் தழைப்பவை. ஆனால், தற்காலத்திலோ, மாயா சக்திகளின் வழிப்பட்டு, நெறி மயங்கித் திரிவோரைக் காணும் போது, இறைவனே இவர்களையும் திருத்தி ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை.

முருகப்பெருமானை நேரில் காட்ட முடியுமா என்று அருணையில் சம்பந்தாண்டான்  என்பவன் கேட்டவுடன், அருணகிரிநாதர் அங்கிருந்த கம்பத்தில் அனைவரும் காணும்படி கந்தனைக் காட்டினார். இது போன்ற அற்புதங்கள் பல நிகழ்ந்தும், நம்பிக்கை வராதவர்கள் பலர் எக்காலத்தும் உண்டு.

ஒன்று மட்டும் நிச்சயம். அவரவர்களின் நிலைக்கு ஏற்ற வகையில் இறைவன், இன்றும் என்றும் தோன்றாத் துணையாகக் காத்துக் கொண்டுதான் இருக்கிறான் என்பதைப் பலரும் தங்களுடைய அனுபவத்தால் அறிவர். இதைப் பிறரும் அறிந்து இறை அருளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தால் எழுந்ததே இவ்வெளியீடு.

எளியேனையும் ஒரு பொருட்டாக ஆட்கொண்டு இறையருள் அடியேனிடம் நிகழ்த்தியருளிய அனுபவங்கள் சிலவற்றைத் தொகுத்து , அடுத்த தலைமுறையினருடன் பகிர்ந்து கொள்வதே இதன் நோக்கம். எல்லாம் சிவன் செயல்.

--- சிவபாதசேகரன்

# “கை தர வல்ல கடவுள்”



சிவபாதசேகரன்

மனிதருள் தலையாய மனிதர் யார் என்ற கேள்விக்கு அப்பர் தேவாரம் கூறும் விடை இதோ:

அனுசயப்பட்டு அது இது என்னாதே
கனி மனத்தொடு கண்களும் நீர் மல்கிப்
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதருள் தலையாய மனிதரே.

என்பது இவ்வினிய பாடல்.

சிவபெருமான் வீற்றிருந்து அருளும் தலம் தோறும் சென்று வழிபடுவோர் பெரும் பயன் இணையற்றது. மூர்த்தி,தலம்,தீர்த்தம் ஆகியவற்றை முறையால் சென்று வழிபடுவோர்க்கு சற்குருவும் கிடைப்பார் என்கிறார் தாயுமான சுவாமிகள்.

ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ பரமேச்வரனது அருளால் தேவாரப் பாடல் பெற்ற தலங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் அடியேன் மனத்தில் எழுந்தது. மார்கழித் திருவாதிரை தரிசனம் செய்ய வேண்டும் என்று நானும் என் நண்பரும் முன்னதாகவே சிதம்பரம் சென்றிருந்தோம். முதல் நாள் காலையில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி, மஹா ரதத்தில் எழுந்தருளி அந்த ரதம் வீதியில் நகர்ந்த பிறகு, மாலைக்குள் அருகிலுள்ள தலங்களைத் தரிசித்துவிட்டுத் திரும்ப வேண்டும் என்று எண்ணினோம்.முதல் நாள் கன-மழை பெய்ததால் வீதிகளில் பல இடங்களில் பள்ளமும் சேறுமாக இருந்தது. ரதம் பவனி வரத் தடை ஏற்படுமோ என்று அஞ்சும்படியாக இருந்தது. ஆனாலும், தீட்சிதர்கள் மற்றும் பக்தர்களின் பிரார்த்தனையால் பரமன் பவனி வந்தான். வடம் பிடித்துச் சிறிது தூரம் போனவுடன், காட்டுமன்னார்குடி செல்லும் வழியிலுள்ள திருநாரையூரைத் தரிசிக்கக் கிளம்பினோம். நாரை பூஜித்த அந்த ஸ்தலம் சம்பந்தராலும் அப்பராலும் பாடப்பெற்றது. நம்பியாண்டார் நம்பி என்ற ஆதிசைவச் சிறுவனுக்காகப் பொள்ளாப் பிள்ளையார் நேரில் தரிசனம் தந்து, நிவேதனத்தை ஏற்றுக் கொண்டு அவனுக்கு எல்லாக் கலைகளையும் உபதேசித்ததாக வரலாறு. திருமுறைகள் சிதம்பரத்தில் ஒரு அறையில் பூட்டப்பட்டு இருப்பதை இத் தெய்வக் குழந்தை மூலம் வெளிப்படுத்தியவரும் இவ்விநாயகரே ஆவார்.

திருநாரையூரில் பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் கோயிலுக்குச் செல்லும் வழியில் காட்டாற்று வெள்ளம் ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தோம். வீராணம் ஏரியின் உபரி நீர் இவ்வாறு செல்வதாகச் சொன்னார்கள். ஆற்று வெள்ளம் அதிகமாக இருந்ததால் மரங்களையும் அடித்துச் செல்லப் படுவதைப் பார்த்தோம். கோயில் அருகாமையில் இருந்த போதிலும் ஆற்றைக் கடந்து செல்வது ஆபத்தானது என்று தெரிந்தது. திருநாரையூர் சிவாலய கோபுரம் தொலைவில் தெரிந்தது. பொள்ளாப் பிள்ளையாரையும், மார்க்கசகாயனான ஸ்ரீ பரமேச்வரனையும் பிரார்த்தனை செய்து கொண்டு வேறு எதுவும் செய்யத் தெரியாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தோம்.

சுமார் ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். திடீரென்று எங்கள் எதிரில் ஒரு ஆள் தோன்றினான். உயரமாகவும், நடுத்தர வயதினனாகவும் இருந்தான். இடுப்பில் வரிந்து கட்டிய கச்சையும், தலையில் முண்டாசும் கட்டிய அவனது தோற்றம் கம்பீரமாக இருந்தது. எங்களிடம் வந்து, " நீங்கள் திருநாரையூர் கோவிலுக்குப் போக வேண்டுமா?" என்று கேட்டான். "ஆமாம்" என்று நாங்கள் சொன்னவுடன் " இந்த வெள்ளத்தைக் கடந்து உங்களால் போக முடியாது" என்றான். அதற்கு முன் தினம், ஒருவரை வெள்ளம் அடித்துச் சென்றதைக் கண்டதாகக் கூறினான். ஒரு நிமிடம் தயங்கிய நாங்கள், " எப்படியாவது போயாக வேண்டும்." என்றோம்.

எங்களது உறுதியைக் கண்டவுடன், " அப்படியானால் என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் " என்று சொல்லியபடி, ஆற்றைக் கடக்கத் தொடங்கினான். நாங்கள் அவனை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டோம். ஆற்று வெள்ளம் படிப்படியாக உய்ந்து இடுப்பளவுக்கு வந்து விட்டது. ஆற்றின் வேகம் எங்களை இழுக்கத் தொடங்கியவுடன் பயம் பற்றிக்கொண்டது. உடனே, "சொற்றுணை வேதியன் " எனத் துவங்கும் அப்பர் சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகத்தை அதற்கான கேதார கௌள ராகத்தில் பாடத் தொடங்கினேன். இப்பதிகத்தைப் பாடினால் "இடுக்கண் இல்லையே" என்று அருளியிருப்பதால் அவ்வாறு பாட எண்ணம் வந்தது. இதைக் கேட்டபடியே, அந்த " ஆளும் " எங்களைத் தாங்கிப் பிடித்தவாறே தண்ணீரில் நடந்து வந்தான். வெள்ளமோ மார்பு அளவுக்கும் வந்து விட்டது. " இது என்ன சோதனை " என்று நினைத்து, அப்பதிகத்தை மீண்டும் பாடினேன். அது முடிந்ததும்,அந்த " ஆள்" அதை மீண்டும் பாடச் சொன்னான். அப்படியே செய்தேன். மெதுவாக அக்கரை வந்தது. எங்களுக்கு அப்போதுதான் உயிர் வந்தது போல இருந்தது. புனர் ஜன்மம் என்பதில் சந்தேகமே இல்லை.

" நான் இங்கேயே இருக்கிறேன். ஆற்று வெள்ளம் அதிகம் ஆனாலும் ஆகலாம். அதற்குள் வந்து விடுங்கள். உங்களை மீண்டும் அக்கரையில் பத்திரமாகக் கொண்டு சேர்த்து விடுகிறேன். " என்றான் அந்த " ஆள்". எனக்கு என்னவோ, யாவரையும் பிறவிப் பெருங்கடலில் இருந்து கரையேற்ற வல்ல மூர்த்தி சொல்வதாகவே தோன்றியது.

திருநாரையூர் கோயிலை அடைந்தோம். மழை ஆதலால் கோவில் வாசல் கடையில் அர்ச்சனை சாமான்கள் எதுவும் கிடைக்கவில்லை. அருகில் ஒருவர் இளநீர் விற்றுக்கொண்டிருந்தார். பிள்ளையாருக்கு இளநீர் அர்ப்பணம் செய்யலாமே என்று தோன்றியது. அதை வாங்கிக்கொண்டு வேகமாகக் கோயிலுக்குள் சென்று பொள்ளாப் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து விட்டு, சுவாமி அம்பாளையும் தரிசனம் செய்துவிட்டு ஆற்றங் கரைக்கு ஓடி வந்தால் அந்த " ஆளை" க் காணோம்! அங்கிருந்தவர்களை விசாரித்தால், அப்படி யாரும் அங்கு வரவில்லை என்றார்கள். அப்படியானால் எங்களைக் கரை சேர்த்தது யார் ? அப்பர் பெருமானைக் கடலிலிருந்து கரை சேர்த்த கடவுளே போலும் ! அப்பதிகத்தின் மேன்மையை உணர்த்தி , சிவானுபவம் காட்ட வந்த லீலையோ என்று எண்ணி மகிழ்ந்தோம்.

ஆற்றில் நீர்மட்டம் அதிகரித்திருந்தது. " என்னையும் அக்கரையில் கொண்டு விடு " என்று ஒரு கிழவி என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாள். பயம் போய்விட்டது. திரும்பத் திரும்ப பதிகத்தைப் பாடியபடியே மெதுவாக அக்கரை சேர்ந்தோம். ஆறு சீறிக் கொண்டு போய்க்கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் மீண்டும் உடல் சற்று நடுங்கியது. திருவருள் கருணையை நினைத்து பரவசப்பட்டோம்.

மாலையில் சிதம்பரம் வந்து வீதியில் தேரிலிருந்த நடராஜ மூர்த்தியைத் தரிசித்தால், " என்று வந்தாய் " என்று குமிண் சிரிப்போடு கேட்பது போலத் தோன்றியது. " காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே " என்ற அப்பர் பெருமானின் வாக்கு நினைவுக்கு வந்தது.

தோன்றாத் துணையே துணை

# அற்புதத் தெய்வம்

சிவபாதசேகரன்




ஸ்ரீ குருகுஹன் துணை

செந்திலாண்டவன் அன்றும் இன்றும் ஆற்றிவரும் அற்புதங்கள் அநேகம். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு, காசி யாத்திரை செய்து விட்டு நானும் என் மனைவியும் ராமேஸ்வரம் சென்று சேதுவிலும் பிற தீர்த்தங்களிலும் நீராடிவிட்டு ராமநாத ஸ்வாமியையும் பர்வத வர்த்தனி அம்பாளையும் தரிசித்துவிட்டு, இரவு 9 மணி அளவில் திருச்செந்தூரை அடைந்தோம். அது மார்கழி மாதமானதால் மறுநாள் விடியற்காலை 5 மணிக்கே கோயிலை அடைந்தால், ஏராளமான ஐயப்ப பக்தர்கள் கூட்டம் இருந்தது. உள்ளே செல்ல முடியவில்லை. இடித்து மோதிக்கொண்டு மிக மிக மெதுவாகப் போய்க்கொண்டு இருந்தார்கள். நம்மால் இவ்வாறு போக முடியாது என்று நாங்கள் இருவரும் தயக்கத்துடன் ப்ராகாரத்திலேயே நின்று கொண்டு இருந்தோம். சிறப்புத் தரிசன வரிசையும் இவ்வாறே இருந்தது. நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்தின் அருகில் வள்ளி தேவசேனா சமேதராக சுப்ரமணிய சுவாமி உற்சவராகக் காட்சி அளிக்கும் சன்னதி இருந்தது. அங்கே அமர்ந்தபடி சிறிது நேரம் சுப்பிரமணிய மூல மந்த்ர ஜபம் செய்து கொண்டிருந்தேன். நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. ஷண்முகரின் சன்னதியில் செய்யக் கொடுத்து வைக்க வில்லையே என்று ஆதங்கப் பட்டுக் கொண்டிருந்தேன். பிறகுதான் தெரிந்தது, இத்தனை நேரம் ஜபம் செய்துகொண்டிருந்த சன்னதி சாதாரணமானது அல்ல என்று. அந்த மூர்த்தியே, ஸ்கந்த சஷ்டி அன்று சூர சம்ஹாரத்திற்கு எழுந்தருளுபவர் என்றும் தெரிந்தது. மீண்டும் அந்த சன்னதியை வணங்கிவிட்டுப் பிராகாரத்தை வலம் வரலானோம்.

வலம் முடியும் முன்பு ஒரு வாயிலின் வழியாக ஏராளமான பக்தர் கூட்டம் வெளியில் வருவதைக் கண்டோம். அவர்கள் பாக்கியசாலிகள். எப்படியோ சிரமப்பட்டு உள்ளே சென்று மூலவரையும், ஷண்முகரையும் தரிசனம் செய்து விட்டு வெளியில் வந்து விட்டார்கள். இந்தக் கூட்டத்தில் நாங்கள் இருவரும் உள்ளே செல்லுவது சாத்தியமல்ல என்று தோன்றியது. இந்தப் ப்ராகாரத்தையாவது வலம் வந்தோம் என்று திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று பேசிக் கொண்டே அந்த வாயிலையே பார்த்துக் கொண்டு ஒரு சில நிமிடங்கள் நின்றிருந்தோம். அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது.

அந்த வாயிலில் இருந்த தேவஸ்தான சேவகர் ஒருவர் என்னை சைகை செய்து அருகில் அழைத்தார். எனக்கோ ஆச்சர்யமாக இருந்தது. " சாமீ, நீங்கள் இருவரும் தரிசனம் செய்யப் போகவில்லையா? " என்று கேட்டார். அது அவருக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் ? அப்படியே ஊகித்து இருந்தாலும் வெளியேறும் வழியில் நிற்பவருக்கு நம்மைப் பற்றி என்ன கவலை? " என் பின்னால் வாருங்கள் " என்றபடியே கூட்டத்தை விலக்கிக் கொண்டு வெளியேறும் வழி மூலம் உள்ளே செல்லத் தொடங்கினார். வியப்பிளிருந்து இன்னும் மீளாத எங்களை ஷண்முகநாதனின் (உற்சவர்) சன்னதியில் கொண்டு போய் நிறுத்தி விட்டு " எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஷண்முகரைத் தரிசனம் செய்து கொண்டிருங்கள். யாரும் உங்களைப் போகச் சொல்ல மாட்டார்கள்." என்று கூறிவிட்டு, எதையும் எதிர்பார்க்காதவராய் உடனே அங்கிருந்து போய் விட்டார்.

ஜனக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. நாங்களோ சன்னதிக்குள் இருந்து கொண்டு ஷண்முகனின் அற்புதத் தரிசனத்தில் லயித்திருந்தோம். பதினைந்து நிமிடங்களுக்கு மேல் ஆகியும் அங்கிருந்த அர்ச்சகர்கள் யாரும் எங்களைப் போகச் சொல்லவில்லை! மாறாகத் தீபாராதனைத் தட்டையும் விபூதிப் பிரசாதத்தையும் திரும்பத் திரும்ப வழங்கினார்கள் ! சன்னதியை விட்டுக் கிளம்ப வேண்டும் என்ற எண்ணமே ஏற்படவில்லை.கண்கள் தாரை தாரையாக நீர் பெருக்கின. இந்நிலையில் மூலவரைத் தரிசிக்க ஆசை இருந்தாலும் அது நடக்கக் கூடியதாகத் தெரியவில்லை. வந்த வழியாகவே வெளியேறி விடுவோம் என்று தீர்மானித்தோம். இவ்வளவு கிடைத்ததே செந்திலாண்டவனின் அருளால்தான் என்று சிந்தித்தவாறு மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு வெளியேறத் தயாரானோம். அப்போது மீண்டும் ஒரு அதிசயம் நடந்தது.

ஒரு அர்ச்சகர் எனது பின்புறத்திலிருந்து என் தோளைத் தொட்டு, "நீங்கள் ஷண்முகரையே பார்த்துக் கொண்டிருந்தால் மூலவரைப் பார்க்க வேண்டாமா ? " என்றார். எல்லோரும் மூலவரைத் தரிசித்து விட்டுத் தான் சண்முகர் சன்னதிக்கு வரமுடியும். அப்படி இருக்கும்போது நாங்கள் மூலவரைத் தரிசிக்கவில்லை என்பது இவருக்குத் தெரிய சாத்தியமே இல்லை. அதுவும், மெனக்கட்டு என்னைத் தட்டி, இப்படிக் கேட்பானேன் ! வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்ட மாதிரித் தோன்றியது. பிறகு நான் , " இந்தக் கூட்டத்தில் நாங்கள் அதற்கு எப்படி ஆசைப்பட முடியும் ? "

என்று கேட்டேன். அதற்கு அவர், “ கவலைப்பட வேண்டாம். என்னைத் தொடர்ந்து வாருங்கள் “ என்றபடியே, கூட்டத்தை விலக்கிக் கொண்டு, எங்களைத் தன்னோடு அழைத்துச் சென்று நேராக மூலவர் சன்னதி வாசலில் கொண்டு விட்டு விட்டு, “ இங்கேயே உட்கார்ந்துகொண்டு எத்தனை நேரம் வேண்டுமானாலும் தரிசனம் செய்யுங்கள் என்று கூறிவிட்டுக் கர்பக்கிரகத்துள் சென்றார். சற்றும் எதிர்பாரா வகையில் தரிசனம் தந்த ஸ்கந்த மூர்த்தியின் கருணையைக் கண்டு உருகினோம். உள்ளே சென்ற அந்த அர்ச்சகர் மூலம் சுவாமிக்கு அர்ச்சனை செய்துகொள்ள வேண்டும் என்று தோன்றியது. பல அர்ச்சகர்கள் அர்ச்சனைத் தட்டுடன் வெளியில் வந்து கொண்டிருந்தாலும் அவர் ஒருவர் மட்டும் வரவேயில்லை. அவரது உருவ அடையாளங்களைச் சொல்லிக் கேட்டால் அப்படி யாரும் இங்கு இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் எங்களை சன்னதிக்கு அழைத்துச்சென்று தரிசனம் தந்து கருவறைக்குள் மாயமாய் மறைந்தது அக்கருணா மூர்த்தியே அல்லவா ? இப்பொழுது நினைத்தாலும் மயிர்க் கூச்சல்  எடுக்கிறது. ஒன்றுக்கும் பற்றாத இவ்வெளியவனேனுக்கும் இரங்கிக் காட்சி தந்ததை என்றும் மறக்க இயலாது.

அர்ச்சனையை  வேறு ஒரு அர்ச்சகர் மூலமாகச் செய்துகொண்டு, பஞ்ச லிங்க தரிசனமும் செய்துவிட்டு வெளியில் வந்தால் கூட்டம் அலை மோதிக்கொண்டுதான் இருந்தது. வெளியே வரும் வாயிலில் எங்களை ஷண்முகனிடம் அழைத்துச் சென்ற தேவஸ்தான சேவகரைக் காணவில்லை ! வேறு ஒருவர் தான் நின்றுகொண்டிருந்தார் !

செந்திலாண்டவன் கலியுகத் தெய்வம் மட்டுமல்ல. அற்புதத் தெய்வமும் தான் அடுத்த முறை திருச்செந்தூர் சென்றபோது மதியம் சுமார் மூன்று மணி இருக்கும். தரும தரிசனத்தில் ஏராளமான கூட்டம். சிறப்புத் தரிசன சீட்டை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தோம். வழியில் ஏகப்பட்ட அடைப்புக்கள். நாங்கள் இருவர் மட்டுமே போய்க்கொண்டிருந்தோம். சுமார் பத்து நிமிடங்கள் எங்குமே நிற்காமல் சன்னதிக்குப் போய்ச் சேர்ந்தோம். எங்களுக்கு முன்னால்  ஒருவர் மட்டுமே இருந்தார். திரும்பிப் பார்த்தால் தரும தரிசனத்தில் மக்கள் வெள்ளம். திகைப்பு அடங்கவே நெடு நேரம் ஆயிற்று. சுவாமியைப் பார்த்தால், “இதற்காகத் தானே ஆசைப் பட்டாய்?” என்று புன்னகையோடு கேட்பதுபோல் இருந்தது.

# மார்க்க ஸஹாயர்

**சிவபாதசேகரன்**



ஸ்ரீ பரமேச்வரன் நல்ல மார்க்கத்தைக் காட்டும் பந்துவாக இருப்பதால் மார்க்க பந்து என்றும், மார்க்க ஸஹாயன் என்றும் வழித்துணை நாதன் என்றும் அழைக்கப் படுகிறான். சத் சஹாயேச்வரர் எனும் பெயர் சுவாமிக்கு இருப்பது போல , மார்க்க சம்ரக்ஷணி என்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரம் என்ற ஊரில் அம்பாளுக்கும் பெயர் உண்டு. ஈச்வரன்  வழி காட்டும் வள்ளலாகவும், துறை காட்டும் வள்ளலாகவும், கைகாட்டும் வள்ளலாகவும், வாக்கைக் காட்டும் வள்ளலாகவும் மயிலாடுதுறைக்குச்  சமீபத்திலுள்ள கோவில்களில் காட்சி அளிக்கிறான் . பிரயாணம் செய்யும்போது வழியில் வரும் தடங்கல், ஆபத்து, போன்றவற்றிலிருந்தும் பக்தர்களை அவன் காப்பாற்றுகிறான் என்பது பலரும் அனுபவத்தால் கண்ட உண்மை.

பல ஆண்டுகளுக்கு முன்னர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களைத் தரிசிக்கப் பயணம் மேற்கொண்டபோது ஏற்பட்ட அனுபவம் இது. நானும் என் நண்பரும் அன்றைய தினம் சீர்காழிக்குப் போகும் வழியில் உள்ள கொள்ளிடம் என்ற ஊரை அடையும்போது காலை 9 மணி இருக்கும். அங்கிருந்து கிழக்கே இருக்கும் தலங்களான நல்லூர்ப்

பெருமணத்தையும் (ஆச்சாள்புரம்) அதற்கு அப்பால் சுமார் ஆறு கி.மீ. தொலைவிலிருக்கும் மகேந்திரபள்ளியையும் தரிசிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தோம். அதிக பஸ் வசதி இல்லாத காலம் அது. சற்று முன்புதான் பஸ் போய்விட்டதாகச் சொன்னார்கள். எனவே அருகிலிருந்த சைக்கிள் கடையில் வாடகை சைக்கிள் கிடைக்குமா என்று கேட்டதில் முன்பின் தெரியாதவர்களுக்கெல்லாம் சைக்கிள் கொடுக்க முடியாது என்று பதில் வந்தது. முதலில், 5 கி.மீ. தொலைவில் உள்ள ஆச்சாள்புரத்தைத் நடந்தே சென்று தரிசிப்பது என்று தீர்மானித்தோம்.

ஆச்சாள்புரத்தை நாங்கள் அடையும்போது சுமார் பத்து மணி ஆகியிருந்தது திருஞானசம்பந்தரின் திருமணம் நடைபெற்ற ஸ்தலம் அது. அதைக்காண வந்தவர்களுக்கு அம்பாள் விபூதி பிரசாதம் வழங்கியதால் திருவெண்ணீற்று உமை எனு தமிழிலும் ஸ்வேத விபூதியாம்பிகை என்று வடமொழியிலும் வழங்கப்படுகிறாள். திருமணம் ஆனவுடன், ஞானசம்பந்தர், “ காதலாகிக் கசிந்து “ என்ற திருப்பதிகத்தை சுவாமிக்கு முன்பாகப் பாடியவுடன் ஒரு ஜோதி தோன்றியது. அதில் அடியார்கள் அனைவரையும் ஐக்கியமாகச் செய்து விட்டுப் பிறகு, தான் மணம் செய்துகொண்ட பெண்ணுடன் சம்பந்தர் அந்த சிவ ஜோதியில் ஐக்கியமானார் என்பது வரலாறு. எனவே , சுவாமிக்கு சிவலோகத் தியாகர் என நாமம் வழங்கப்படலாயிற்று.

ஆலய தரிசனம் முடிந்து வெளியே வரும்போது மணி 11ஐ தாண்டி விட்டது. சாலைக்கு அருகில் வரும்போது தூரத்தில் மகேந்திரபள்ளிக்குச் செல்லும் பஸ் வருவதைக் கண்டவுடன் எங்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சம்பந்தப்பெருமானது அருள் எனக் கருதி, அதில் ஏறி மகேந்திர பள்ளியை அடைந்தோம். அங்கு உச்சிக்கால ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருந்தன. சிறிய கோவிலானாலும் தெய்வ சான்னித்தியம் நிரம்பவும் இருந்ததை உணர முடிந்தது.

அக்கோயிலுக்கு அருகில் உள்ள ராமர் சன்னதி அவசியம் தரிசிக்க வேண்டியதாகும். சீதா ராம லக்ஷ்மண பிம்பங்கள் பெரிதாகவும் அழகாகவும் இருந்தன. கோவிலை விட்டு வெளியில் வந்து பார்த்தால் நாங்கள் வந்த பஸ் திரும்பிப் போய்விட்டதாகவும் இனிமேல் 3 மணிக்கு மேல்தான் அடுத்த வண்டி என்றும் தெரிந்தது. மணியோ 12.30 தான் ஆகி இருந்தது. கொள்ளிடமோ 11 kkகி. மீ. தூரம். பசியாகவும் களைப்பாகவும்

இருந்ததால் நடந்து போக உடம்பு இடம் கொடுக்கவில்லை. அருகிலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடம் அரை நாளோடு முடிந்துவிட்டதால், அந்தத் திண்ணையிலேயே அமர்ந்தோம். " சம்பந்தர் பாடிய தலம் என்று கூட்டிக் கொண்டு வந்தாய். இப்படி ஆகி விட்டதே." என்று நண்பர் சிறிது கலக்கம் அடைந்தார். என் உள் மனத்திலோ, " நம்மை வழித்துணையாகக் கூடவே இருந்து தரிசனம் காட்டுவிக்கும் பெருமான் இதற்கும் வழி காட்டுவான் "" என்ற எண்ணம் இருந்தது. களைப்பு மிகுதியால் இருவரும் அந்தத் திண்ணையிலேயே தூங்கி விட்டோம்.

யாரோ எங்களை எழுப்பியதுபோல் இருந்தது. கண் விழித்துப் பார்த்தால் சைக்கிளுடன் ஒரு நபர் நின்றுகொண்டிருந்தார். அவர் கை நிறைய வெற்றிலைக் கட்டுக்கள் இருந்தன. " நீங்கள் கொள்ளிடம் போகும் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிஈர்களா ? " என்று கேட்டார். நாங்கள் வியப்புடன் " ஆமாம் " என்றோம். " தற்போது கொள்ளிடம் செல்லும் ஒரே பஸ் நடுவழியில் பழுதாகி நின்று விட்டதால் நீங்கள் பல மணி நேரம் இங்கேயே காத்துக் கொண்டு இருக்க வேண்டி இருக்கும். இந்த சைக்கிளை நான் கொள்ளிடத்திளிருந்து வாடகைக்கு எடுத்து வந்திருக்கிறேன். எனக்கு மீண்டும் அங்கு போக முடியாமல் இருக்கிறது. ஆகவே நீங்கள் இதை ஒட்டிக கொண்டு போய் அங்குள்ள கடையில் திருப்பிக் கொடுத்து விடுங்கள் " என்று சொல்லி, வாடகைக் காசையும் கையில் கொடுத்துவிட்டு உடனே சென்று விட்டார். ஏதோ கனவில் நடப்பதுபோல் இருந்தது. அவர் மீண்டும் ஏன் கொள்ளிடம் போகவில்லை? முன்பின் தெரியாத எங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி வாடகை சைக்கிளை ஏன் கொடுத்தார்? ஒன்றுமே புரியவில்லை. நண்பரை நோக்கி, " இதைத் தெய்வச் செயல் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது " என்றேன். பின்னர் இருவருமாய்ப் பெடல் செய்துகொண்டு கொள்ளிடத்தை அடைந்து அவர் குறிப்பிட்ட கடைக்குச் சென்று வாடகை எவ்வளவு தர வேண்டும் என்று கேட்டோம். கடைக்காரர் சொன்ன தொகையும் எங்களிடம் அந்த நபர் கொடுத்த தொகையும் ஒன்றாக இருந்தது. வேறு நபர் சைக்கிளைக் கொண்டு வந்தது பற்றி கடைக்காரர் எதுவும் கேட்கவில்லை. எல்லாம் ஆச்சர்யமாகவே இருந்தது. அதோடு ஸ்ரீ பரமேச்வரன் தனது பக்தர்களுக்கு வழிகாட்டும் வள்ளலாக விளங்குவதும் புரிந்தது.

சிவ சிவ

# வழித்துணை நாதன்

**சிவபாதசேகரன்**



தனிவழி என்பது மனித நடமாட்டமே இல்லாத இல்லாத வழி என்பது தெரியாமல் சில சமயங்களில் அதில் போய்ப் பார்க்கலாமே என்று ஒரு அசாதாரண துணிச்சல் வருவதுண்டு. அப்படிப் போனால் அதன் விளைவுகளைச் சந்திக்க நேர்ந்தால் யாரைத் துணைக்கு அழைப்பது என்று பயத்தில் தடுமாறுகிறோம்." பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே " என்று அருணகிரிநாதரும் பாடியிருக்கிறார் .

சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் வெளியிட்ட ஸ்ரீ ருத்ர புஸ்தகத்தில் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார். ஒரு சமயம் அவரது சித்தப்பாவும் சித்தியும் நன்னிலத்திலிருந்து ஸ்ரீவாஞ்சியம் செல்லவேண்டியிருந்தது. அது மாலை நேரம். இவ்விருவர் மட்டுமே சென்று கொண்டிருந்தார்கள். சற்று நேரத்தில் இருட்டிவிடவே, நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்டது. அதைக் கேட்ட அந்த அம்மாள் மிகவும் பயப்படவே, தீக்ஷிதர், ஸ்ரீ வாஞ்சிநாத சுவாமியை தியானித்துக் கொண்டு ஸ்ரீ ருத்ரத்தை ஜபித்துக் கொண்டே நடக்கலானார். திடீரென்று விளக்கேந்திய ஒருவர் வந்தார். வந்தவர், "நீங்கள் ஸ்ரீ வாஞ்சியம் போகிறீர்களா? நான் அந்தக் கோவிலின் அர்ச்சகர். அங்குதான் போய்க் கொண்டு இருக்கிறேன். இந்த விளக்கு வெளிச்சத்தில்

பயப்படாமல் என்னோடு வாருங்கள்” என்றார். இப்படி ஒருவர் துணையாக வருவது இருவருக்கும் தைரியமாக இருந்தது. பேசிக் கொண்டேமூவரும் ஸ்ரீ வாஞ்சியத்தை அடைந்தார்கள். “நாளைக் காலையில் கோவிலுக்கு தரிசனம் செய்ய வருகிறோம் என்று சொல்லிவிட்டு அர்ச்சகரிடம் தம்பதிகள் விடைபெற்றுக் கொண்டனர். அர்ச்சகரும் கோவிலுக்குள் போய் விட்டார்.

மறு நாள் காலையில் ஸ்ரீ வாஞ்சிநாத சுவாமி சன்னதியில் தங்களோடு துணைக்கு வந்த சிவாசாரியாரைக் கண்டவுடன், “ நல்ல வேளையாக நேற்று எங்களுக்குத் துணையாக வந்தீர்கள்” என்றார் தீக்ஷிதர். அதைக் கேட்டு ஆச்சர்யம் அடைந்த அர்ச்சகரோ, “ நான் நேற்று ஊரை விட்டு எங்குமே போகவில்லையே.” என்றார். அப்போதுதான் தீக்ஷிதருக்குத் தெரிந்தது , குருக்கள் உருவத்தில் வந்தது ஸ்ரீ வாஞ்சிநாதரே என்று. ஸ்ரீ ருத்ர மகிமையை இவ்வாறு விவரிக்கிறார் சேங்காலிபுரம் தீக்ஷிதர்.

தாம்பரத்துக்கு அருகில் மாடம்பாக்கம் என்ற ஸ்தலம் இருக்கிறது. சுவாமிக்குத் தேனுபுரீச்வார் என்பது நாமம். காமதேனு பூஜித்தபடியால் இப்பெயர் வந்தது. அங்கு சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு வரலாம் என்று நானும் என் நண்பரும் கிளம்பினோம். இது நடந்து சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். சேலையூர் என்ற இடத்தில் பஸ்ஸை விட்டு இறங்கி நடந்து போக வேண்டும் என்று சொன்னார்கள்.

சேலையூரை அடையும்போது மாலை மணி ஐந்து இருக்கும். அங்கிருந்தவர்களிடம் விசாரித்து விட்டு, மாடம்பாக்கம் செல்லும் சாலையில் நடக்க ஆரம்பித்தோம். இப்போதுபோல அந்தக்காலத்தில் அப்பகுதியில் அதிக வீடுகள் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாகவே இருந்தன. சிறிது தூரம் நடந்தபிறகு வீடுகள் எதுவுமே தென்படவில்லை. அப்போது, கூடவந்த நண்பர், “இப்படிச் சாலையோடு போய்க் கொண்டு இருந்தால் நெடு நேரம் ஆகும். சாலையை விட்டு இறங்கிக் குறுக்கு

வ ழியில் போய் விடலாம்.” என்றார். சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகிவிடவே எனக்கும் அதுவே சரி எனப்பட்டது.

வயல் வெளி போல இருந்த இடத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தோம். கொஞ்ச தூரம் போனவுடன் பரந்த மைதானமே தென்பட்டது. அதில்

ஒற்றையடிப் பாதை கூட இல்லை. எதிரில் வருவோரையும் காணோம். வெளிச்சம் மங்க ஆரம்பித்தவுடன் தடுமாற்றம் அடைந்தோம். நான்கு பக்கமும் எங்கு நோக்கினாலும் வீடுகளோ சாலையோ இல்லை. மனித நடமாட்டமும் இல்லை. உயர்ந்த பனை மரங்களே காணப்பட்டன.

ஒழுங்காகச் சாலை வழியாகப் போயிருந்தால் இத்தனை நேரத்தில் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்திருக்கலாம். இப்பொழுது என்ன செய்வது? விசாரிப்பதற்கு யாராவது வர மாட்டார்களா என்று நாற்புறமும் நோக்கியும் பயன் இல்லை. அப்பொழுதுதான், அப்பர் சுவாமிகள் அருளிய பஞ்சாக்ஷரப் பதிகத்தைப் பாடவேண்டும் என்று தோன்றியது. அது இடர் களையவல்ல பதிகம் என்று அனுபவத்தில் கண்ட பெரியோர்கள் சொல்லக் கேட்ட ஞாபகம் வந்தது. ஆகவே அதைப் பாடத் துவங்கினேன். பதிகம் முடிந்த அதே கணத்தில் அந்த அதிசயம் நடந்தது.

திடீரென்று ஒரு சைக்கிள் எதிரே வந்தது. கருத்த சரீரமும்,நரைத்த தாடியும் கொண்ட ஒருவர் அதை ஓட்டி வந்தார். சைக்கிளின் பின்புறம் ஒரு பால் குடம் கட்டப்பட்டிருந்தது. நல்லவேளையாக ஒருவர் வந்தார் என்று நினைத்து, அவரிடம், "மாடம்பாக்கம் சிவன் கோவிலுக்கு எப்படிப் போகவேண்டும்? " என்று கேட்டேன். அதற்கு அவர், சைக்கிளை விட்டு இறங்காமல்,அதன் வேகத்தை மட்டும் கட்டுப்படுத்தியவராக, " வழி தவறி வந்து விட்டீர்களே! அதோ தெரிகிறதே ஒரு மரம். அதைக் குறியாக வைத்துக் கொண்டு வேகமாக நடந்தால் கோவிலுக்குப் போகும் சாலையை அடையலாம்." என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். எனக்கு என்னவோ அவரை மீண்டும் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. வந்தவரை இருவருமாகத் திரும்பிப் பார்த்தால் காணவில்லை ! இதில் அதிசயம் என்னவென்றால், அங்கு சந்துகளோ தெருக்களோ கிடையாது. எங்கும் பரந்து விரிந்த மைதானம். பொட்டை வெளி என்பார்களே , அதுபோலத்தான் இருந்தது. தேவாரப் பதிகத்தின் மகிமையை நினைத்து நெகிழ்ந்தோம். அப்பெரியவர் காட்டிய திசையிலே சென்று இருட்டுவதற்குள் சாலையை அடைந்து ஒரு வழியாகத் தேனுபுரீச்வரர் கோயிலை அடைந்து தரிசனம் செய்தோம். திரும்பி வரும்போது ஒழுங்காக சாலை வழியிலேயே வந்தோம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா என்ன ?

# குல தெய்வம்

சிவபாதசேகரன்



ஞான மயமேயான, ப்ரணவஸ்வரூபனான,, ப்ரம்மண்ய மூர்த்தியான, சிவ குமாரனான சுவாமிநாதனே எங்கள் குலதெய்வமாக இருப்பதை எத்தனையோ பிறவிகளில் செய்த பூஜாபலனாகக் கருதுகிறேன்.அதிலும் சிவ பூஜையையும், சுப்பிரமணிய ஆராதனையையும் தினமும் செய்துவரும் குடும்பத்தில் பிறந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். பரம்பரையாக சிவ பஞ்சாயதன பூஜையும், சுப்பிரமணிய பூஜையும் நடைபெற்று வருவது ஈச்வரானுக்ரஹம் என்பதில் சந்தேகம் இல்லை.

எங்களது மூதாதையர்கள் , தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்பந்துறை (பேணு பெருந்துறை என்ற தேவாரப் பாடல் பெற்ற தலம் ),பரவக்கரை, அசிக்காடு ஆகிய ஊர்களில் வாசம் செய்துவந்தார்கள். எனது பிதாமகரின் தகப்பனார் அசிக்காடு கிராமத்திலேயே இருந்தார். அவர் அங்குள்ள ஸ்ரீ வாத்சல்யாம்பிகா சமேத ஸ்ரீ ரஜத கிரீச்வர சுவாமி கோவிலின் கருங்கல் மண்டபத்தைக் கட்டிக்கொடுத்திருக்கிறார். எனது பிதாமகரும் அங்குள்ள சிவ-விஷ்ணு கோவில்களுக்கும், அருகிலுள்ள மூவலூர் ஸ்ரீ மார்க்கசகாய சுவாமி கோவிலுக்கும் ஆண்டு முழுதும் விளக்குக்கு எண்ணையும்

,அபிஷேகத்திற்குப் பசும்பாலும் கொடுத்து வந்தார். அந்த சிவ தர்மங்கள் இன்றளவும் குடும்பத்தைக் காப்பாற்றி வருவதாகவே நினைக்கிறேன். அவர் காலமான பிறகு பூஜையை அவரது சகோதரர்கள் தங்களது ஊர்களில் செய்து வந்தனர். மெலட்டூரில் இருந்த உறவினரிடமிருந்து பூஜையைப் பெற்றுக் கொண்டு வந்தேன்.

குலதெய்வம் என்பதால் உறவினர்கள் பலர் வந்து, ப்ரார்த்தனைகளைச் செலுத்துவது வழக்கம். கிராமத்தில் இருந்தபோது வீட்டிலுள்ள யாராவது பிரார்த்தனையைச் செலுத்த மறந்திருந்தால் சுவாமி சன்னதியின் மேலே இருந்த உத்தரத்தில் ஒரு பாம்பு வந்து விடும். அதைக் கண்ட என் பிதாமகர், விளக்கு ஏற்றச் சொல்லிவிட்டு , " சுப்ரமண்யம், யாராவது வேண்டிக் கொண்டிருந்தால் அதைச் செய்யச் சொல்கிறேன்," என்று சொல்லிவிட்டு, மற்றவர்களை விசாரிப்பார். அப்போது பாட்டி மெதுவான குரலில் " மாவிளக்கு மாவு சன்னதியில் போடுவதாக வேண்டிக் கொண்டேன். வரும் கிருத்திகை அன்று அதைச் செய்து விடுகிறேன்" என்பாராம். அடுத்த நிமிடமே அந்தப் பாம்பு மாயமாக மறைந்து விடுமாம்.

எனக்குப் பத்து வயது இருக்கும்போது, என்னையும் அழைத்துக் கொண்டு, ராமேச்வர யாத்திரை மேற்கொண்டார் தாத்தா. வழியில் மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய தலங்களையும் தரிசித்தோம். பிறகு காசிக்கும் என்னை அழைத்துப் போக முடியாமல் போனது அவருக்குக் குறையாகவே இருந்தது.

அசிக்காட்டில் ஸ்கந்த சஷ்டி பூஜை விமரிசையாக நடக்கும்.எனக்கு ஐந்து வயதே ஆகியிருந்தாலும் எனக்கும் ஒரு கைங்கர்ய பலன் இருக்க வேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ, எனக்கு ஒரு பட்டைக் கட்டிவிட்டு, சந்தனக் கட்டையைக் கொடுத்து அதைக் கல்லில் அரைக்கச் சொல்லுவார் தாத்தா. ஒவ்வொரு வீட்டிலும் பெரியவர்கள் , குழந்தைகளை சிறு வயதிலிருந்தே எல்லா தெய்வ கார்யங்களிலும் ஈடுபடுத்தினால் அவர்கள் பிற்காலத்தில் கெட்ட வழிகளில் போகாமல் இருப்பார்கள்.

என் குமாரன் பிறந்து , தொட்டிலில் போட்டுக் கீழே நெல்லில் பெயர் எழுதும் சமயம். சுவாமிநாதன் என்று குலதெய்வத்தின் பெயர் வைக்க வேண்டும் என்றேன். ஒவ்வொருவர் ஒவ்வொரு பெயரைச் சொன்னார்கள். எனக்கு அவற்றை ஏற்க மனமில்லை. அங்கு வந்திருந்த ஒரு பெண்மணி

இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் எங்களுக்கு தாயாதி உறவு முறையும் கூட. அவருக்குத் திடீரென்று ஆவேசம் வந்துவிட்டது. உரத்த குரலில், " என் பெயரையே எழுத வேண்டும் " என்று உத்தரவிட்டார். பிறகு அப்பெண்மணி மயங்கிச் சாய்ந்துவிட்டார். குழந்தைக்கு சுவாமிநாதன் என்றே நாமகரணம் செய்விக்கப்பட்டது.

மற்றொரு முக்கிய சம்பவம் தைக் கிருத்திகை அன்று நடந்தது. காலையில் பூஜையை செய்துவிட்டு, வேலைக்குப் போய்விட்டு மாலையில் வீடு திரும்பியதும் அனுஷ்டானம் செய்துவிட்டு பாராயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. வந்தவர்கள் இரு பெண்மணிகள். இருவரும் சகோதரிகள். என்பது பின்னர் தெரிய வந்தது. அவர்கள் வீட்டுக் கல்யாணத்திற்காகப் பத்திரிகை கொடுக்க வந்திருந்தார்கள். முன்பே அவர்களைத் தெரிந்திருந்ததால் என் மனைவி அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள். நானோ வேறு புறம் பார்த்துக் கொண்டு பாராயணம் செய்து கொண்டிருந்தேன். திடீரென்று அவர்களுள் இளையவர் உரத்த குரலில், " நீ என்னை நன்றாகப் பூஜை செய்கிறாய்." என்று சொன்னது கேட்டுத் திரும்பினேன். அப்போது அவர், "உன்னைத் தான் சொல்கிறேன்; நீ என்னை நன்றாகப் பூஜை செய்கிறாய்" என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நானோ அந்தப் பெண்மணியை அதற்கு முன் பார்த்ததில்லை. அதாவது போகட்டும். " நீ... என்னை... பூஜை.." இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று உடனே விளங்கவில்லை. மறுகணம் அப்பெண்மணி மூலம் பூஜாமூர்த்தி பேசுவதை உணர்ந்தேன்.

ஒரு சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, " நான் செய்யும் பூஜை எனக்குத் திருப்தியாக இல்லை. அவசர அவசரமாகப் பண்ணிவிட்டு உத்தியோகத்திற்கு ஓடுகிறேன். வீட்டுப் பெரியவர்கள் போல் செய்ய முடியவில்லை " என்றேன். அதற்கு அவர், " நீ ஏன் குறைப்பட்டுக் கொள்கிறாய்? எனக்குப் பூரண திருப்தியாக இருக்கிறது என்று நானே சொல்கிறேனே! அப்படிக் குறையாக இருந்தால் ஒன்று சொல்கிறேன். நீ நிதானமாக விதவிதமாக அலங்காரங்கள் பண்ணிப் பார்க்க அவகாசம் கிடைக்கும். அப்போது உன் ஆசைப்படி பூஜை செய்." என்றார்.

பிறகு, அருகிலிருந்த தமக்கையைக் காட்டி , " இவர்கள் வீட்டில் வேலை வைத்துப் பூஜை செய்கிறார்கள். உங்கள் வீட்டில் கல்யாணக் கோலத்துடன்

இருக்கிறேன். இவர்களுக்குக் குலதெய்வமாக ஆய்*க்குடியில் ( தென்காசிக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய ஸ்தலம்) இருக்கிறேன். நீ ஆய்க்குடி போயிருக்கிறாயோ? " என்று கேட்டார். அதற்கு நான், " இன்னும் அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை" என்றேன். உடனே அவர், " கவலைப் படாதே. நானே உன்னை அழைத்துக் கொண்டு போய்க் காட்டுகிறேன்" என்றார். அப்போதுதான் ஒரு உண்மை தெரிய வந்தது. ஸ்தல யாத்திரை என்பது நாமாகத் திட்டமிட்டுச் செய்யப்படுவது அல்ல. சுவாமியே உடன் இருந்து நடத்திவைக்கிறார் என்பதே அது.

அப்போது மூத்த பெண்மணி, தன் " தங்கையைப் " பார்த்து, " இவர்களது குடும்பத்திற்கு ஆசி வழங்க வேண்டும் " என்றார். அதற்கு சுவாமி பதில் சொல்வதற்குள் நான் , " சுவாமிக்கு எதை எப்போது கொடுக்க வேண்டும் என்று தெரியும். அவரிடம் இப்படிக் கேட்கக் கூடாது " என்றேன். அதற்குப் பெரிதாக வாய் விட்டுச் சிரித்தவராக, சுவாமி, " எல்லோரும் என்னை இதைக் கொடு அதைக் கொடு என்று கேட்கிறார்கள். நீயோ எல்லாம் சுவாமிக்குத் தெரியும் என்கிறாய்." என்றார். அதுதானே உண்மையும் கூட! பரம்பரை பரம்பரையாக இந்த பூஜை தொடர வேண்டும் என்ற ஒரே ப்ரார்த்தனையைத்தான் செய்தேன். வேறு எதுவும் கேட்க வேண்டும் என்ற எண்ணம் துளிக்கூட ஏற்படவில்லை.

சுவாமியின் அடுத்த கேள்வி : " எனக்குத் தீட்டு கலப்பது உதவாது. பரம்பரையாக வருபவர்களில் ஆண்கள் ஆசாரத்துடன் என்னைத் தொட்டு பூஜிக்கலாம். உனக்குத் தெரிந்திருக்குமே!" நான் அதற்கு, " பெரியவர்கள் சொல்லியிருப்பதால் இன்றளவும் அதைக் கடைப் பிடித்து வருகிறேன்" என்றேன். திடீரென்று எழுந்திருந்து, " நான் பூஜை அறைக்குள் சென்று என்னைத் தொட்டுப் பார்க்கலாமா?" என்றார். நான் வந்திருப்பது சுவாமி என்பதை அந்த வினாடிகளில் மறந்தவனாக, " இப்பொழுதுதான் பெண்கள் என்னைத் தொடவேண்டாம் என்றீர்கள். ஆகவே தொட்டுப் பார்ப்பது எப்படி?' என்றேன். அதற்கு அவர், " என்னையே நான் தொட்டுப் பார்க்கவேண்டாம் என்கிறாயா? " என்று கேட்டார். அப்பொழுதுதான் நான் சொன்னது தவறு என்பது புரிந்தது. " தப்புதான் சுவாமி. மன்னிக்க வேண்டும். நீங்கள் தாராளமாக உள்ளே போய்ப் பார்க்கலாம்." என்றேன் மறு நிமிடமே அவர் பூஜை அறைக்குள் நுழைந்தார். நான் பின் தொடராமல் அவர் வெளியில் வருவதற்காகக் காத்துக் கொண்டு இருந்தேன். அடுத்த சில நிமிடங்களில்

வெளி வந்தவுடன் அப்பெண்மணி தரையில் சாய்ந்து விட்டார்.அவரது தமக்கை அவர்  முகத்தில் தண்ணீர் தெளித்த சில நிமிடங்களில் சுய நினைவு பெற்றார். தான் எப்படித் தரையில் சாய்ந்து விட்டோம் என்பது அவருக்குப் புரியவில்லை. நடந்த நிகழ்ச்சிகள் அவருக்குத் துளிக்கூடத் தெரியாவிட்டாலும் நமக்கு அருள் செய்யவே முருகன் செய்த லீலை என்று உணர்ந்தோம். பிறகு அவ்விருவரும் விடைபெற்றுத் தங்கள் இல்லம் திரும்பினர். அதற்குப் பிறகு அவர்கள் மீண்டும் வரவே இல்லை.

நம்மில் பலருக்கு சோதனைகள் வரும்போது சுவாமிக்கு பக்தி செய்தும் சோதனை வருகிறதே என்று தோன்றும். அந்த நேரத்தில் தான் அதனை பக்தி அதிகமாவதற்கு சுவாமி தந்த அருமையான வாய்ப்பு என உணர்ந்து முன்னைக்காட்டிலும் அதிக பக்தி செலுத்த வேண்டும். அது மிகவும் கடினம் தான். எல்லோராலும் முடியாதுதான்.   " எனது கஷ்டங்களை எல்லாம் தீர்த்து வைக்காவிட்டாலும் சரி: என்னிடம் இரக்கம் துளிக்கூட ஏற்படாவிட்டாலும் சரி; எனக்கு அந்த ஆனந்த தாண்டவ மூர்த்தியே கதி. அவனிடத்தில் உள்ள அன்பு மட்டும் என்றும் என் நெஞ்சை விட்டு ஒருக்காலும் நீங்காது " என்கிறார் காரைக்கால் அம்மையார். ஆவரது பக்தியில் ஒருதுளியாவது நமக்கும் வரவேண்டும் என்று நாம் எல்லோரும் பரமேச்வரனைப் பிரார்த்திக்க வேண்டும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துவது மட்டுமில்லை .நமது பூஜையை சுவாமி ஏற்றுக் கொள்கிறானா என்ற சந்தேகம் எழாமல் இருக்கவும் அவை வகை செய்கிறன .சுவாமி கூடவே இருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?



,

# “ஞானம் காட்டுவர்”

சிவபாதசேகரன்



“ ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்

தானம் காட்டுவர் தன்னடைந்தார்க்கு எல்லாம்

தானம் காட்டித் தன் தாள் அடைந்தார்கட்கு

வானம் காட்டுவர் போல் வன்னியூரரே. “

என்பது அப்பர் தேவாரத்தில் ஒரு பாடல். பரமேச்வரன் முதலில் நமக்கு ஞானத்தை அருள வேண்டும். பிறகு, தான் எழுந்தருளியுள்ள தலங்களைக் காட்டி அருள வேண்டும். அவன் தாளை வணங்கும் நல்ல நெறியையும் காட்டிப் பிறவாத பேரின்ப வெள்ளத்தில் அழுத்தித் தன் அடியார்களைத் தன்னோடு சிவலோகத்தே இருத்திக் கொள்வான் என்பது இப்பாடலின் திரண்ட கருத்து.

மேற்கண்ட நிலைகள் நம் முயற்சியால் எய்தப்படுபவை அல்ல. ஈச்வரன் முன்னின்று அருளினால் மேற்சொன்ன ஞானம்,தானம்,வானம்,சிவநெறி ஆகிய எல்லாம் எளிதாக சித்திக்கும். இதையும் நமக்கு அனுபவத்தால் உணர்த்துவான் அவன்.

மயிலாடுதுறை உயர் நிலைப் பள்ளியில் படித்த ஆறு ஆண்டுகளும், பள்ளி முடிந்து வீடு திரும்பியதும் ஏதோ ஒரு உந்துதல் , அருகிலிருந்த ஸ்ரீ வதான்யேச்வர சுவாமி கோயிலுக்கு சாயரக்ஷைக்குப் போவதை நியமமாக ஏற்படுத்திக் கொடுத்தது.அங்குள்ள ஸ்ரீ மேதா தக்ஷிணா மூர்த்திக்குத்தான் சாயரட்சை பூஜை முதலில் செய்வார்கள். அப்படி ஆறு ஆண்டுகள் கிடைத்த தரிசனத்தின் பலனே இப்போது அடியேனை சிவத்தொண்டு ஆற்ற வைப்பதாகக் கருதுகிறேன்.

அதேபோல் கல்லூரி நாட்களில், பரீட்சைக்காகப் பக்தி இலக்கியக் கட்டுரை தயாரிக்க நூலகத்தை நாடியபோது, தேவாரம்,பெரிய புராணம் ஆகிய நூல்களை மேலெழுந்தவாரியாகப் பார்க்க நேரிட்டது. அதுவே பிற்காலத்தில் திருமுறைகளில் ஈடுபாடு வருவதற்கு முதல் படி என்பதை அப்போது உணரவில்லை. பின்னர், சிதம்பர தரிசனம் செய்தபோது, அங்கு எழுதப்பட்டிருந்த திருமுறைப் பாடல்களில் பெய்தும் ஈடுபட்டேன். ஊருக்குத் திரும்பியதும் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டேன்.

முதலில் பல தயக்கங்கள். பல இடங்கள் பொருள் விளங்கவில்லையே. பண்ணோடு பாடுவது எப்படி? இப்படிப் பல வினாக்கள் எழுந்தன. ஒருநாள் அருகிலிருந்த சிவாலயத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு மாதாந்திர வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரபல ஓதுவாமூர்த்திகளான , தருமபுரம் சுவாமிநாதன் அவர்கள் பண்ணோடு பாடிக்கொண்டிருந்தார்கள். அடுத்த மாதத்திலிருந்து, அவர் பங்கேற்கும் மாதாந்திர வழிபாடுகளுக்குச் சென்று பண்ணிசையை உன்னிப்பாகக் கவனித்து வரலானேன். மாதம் ஒருநாள் அவர் நடத்திய பன்னிரு திருமுறை முற்றோதுதலுக்கும் தவறாமல் சென்று வந்தேன். பல ஐயங்கள் நீங்கலாயின. பண்ணோடு பாட வேண்டும் என்ற எண்ணத்தையும் இறைவன் கொடுத்தான். வெளியாகப் பார்க்கும்போது நம் பிரயத்தனம் போலத் தோன்றினாலும் அந்த ஞானத்தைக் கொடுத்தது ஞான வடிவமேயான அந்த மூல மூர்த்திதான்.

அடுத்தது பாடல் பெற்ற ஸ்தலங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தான் பரமன். அதன்படி அவகாசம் கிடைக்கும்போதெல்லாம் பாடல் பெற்ற ஸ்தல யாத்திரை நடைபெற்றது. அதற்குப் பல ஆண்டுகள் ஆனாலும் அதனால் கிடைத்த அனுபவங்கள் அருமையிலும் அருமை. தாயுமானவர் சொன்னதுபோல் அந்த யாத்திரைகளின் பயனாக இறையருள் கிடைத்ததோடு, குருவருளும் கிடைத்தது என் பாக்கியமே. மூல மந்திர ஜெபங்கள் பலவற்றைத் தக்க குருநாதர்கள் மூலம் உபதேசிக்கப் பெற்றேன்.

நாம் யாத்திரை செய்வதால் கோயில்களுக்கும் நம்மால் முடிந்த தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததது. அதன் பயனாகத் . திருவாதிரையான் திருவருட் சபை என்ற அமைப்பை எற்படுத்தத் திருவருள் கூட்டியது. குகஸ்ரீ வாரியார் சுவாமிகளும் ,திருப்பனந்தாள் ஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் புரவலர்களாக அமைந்து ஆசீர்வதித்தார்கள். அது ஆல் போல் தழைத்துப் பல்வேறு சிவப்பணிகளை இன்றளவும் செய்து வருகிறது.

“இணங்கத் தன் அடியார் கூட்டமும் காட்டி” என்று மாணிக்கவாசகர் சொல்வதுபோல், இனிய பல அடியார்கள் அறிமுகமானார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, அடியார்களிடையே பேதம் பாராத பக்குவமும் அவனருளால் கிட்டியது.

“ நான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்” என்ற வாக்கின்படி நமக்குத் தெரிந்ததைப் பலருக்கும் தெரியப்படுத்துமாறு அடியேனுக்கு இறைவன் கட்டளை இட்டுள்ளான். அதன்படி, நேரிலும், பத்திரிகை,கணினி ஆகியன மூலமாகவும் இத்தொண்டாற்ற முடிகிறது.

“ மற்று நான் பெற்றது ஆர் பெறவல்லார்?” என்ற சுந்தரர் வாக்கை நினைத்துப் பார்க்கையில் இதற்கு மேலும் பெருமானிடம் கேட்பதற்கு என்ன இருக்கிறது என்று தோன்றுகிறது. “ உனது பாதார விந்தம் என் சிரத்தின் மீது வைத்திடு ; வேறு எதுவும் நான் வேண்டேன் “என்று நக்கீரர் கேட்ட வரத்தைத்தான் கேட்கத் தோன்றுகிறது.அதற்குத் தகுதியானவன் தானா என்பது அந்தர்யாமியான ஈச்வரனுக்குத்தான் தெரியும்.

# நிறைவுரை

**சிவபாதசேகரன்**

தெய்வீக அனுபவங்கள் என்றுமே நிறைவடைவதில்லை. வாழ்நாள் முழுவதும் நம்மைத் தொடந்து வருபவை அவை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அனுபவம். சுவாமி நம் பக்கத்தில் இருப்பதை உணரும் அனுபவமும்கூட! இதெல்லாம் நம்மோடு முடிந்துவிடக் கூடாது. அடுத்த தலைமுறைக்குச் சொல்லத் தவறிய பாவம் நம்மைச் சேர்ந்து விடும். " தெய்வம் உண்டென்று இரு " என்ற பெரியோர் வாக்கு அவர்களது மனத்தில் ஆழப் பதியும்படி செய்ய வேண்டியது நமது முக்கியமான கடமை ஆகும். இதனால் அவர்கள் நல்ல ஒழுக்கமும் பக்தியும் உள்ள பிரஜைகளாகத் திகழ்வர் என்பது நிச்சயம்.

தவம் செய்பவர்களுக்கும் சிவ பக்தி இருக்கவேண்டியது அவசியம். அதையே, " சிவத்தைப் பேணுதல் தவத்திற்கு அழகு " என்றார்கள். மகா பிரதோஷத்தின்போது ருத்ராக்ஷ தாரியாக ஜபத்தில் இருந்த காஞ்சி பெரியவர்களைத் தரிசித்தவர்களுக்கு இது தெரியும். தவத்தின் பொலிவே அதுதான்.

உலகியல் ரீதியில் வாழ்க்கை நடக்கும் தற்காலத்தில் இளைய சமுதாயத்தவர்களுக்கு நம்பிக்கை இருப்பது சற்றுக் கடினமாகத் தோன்றினாலும், அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் சொன்னால் அதற்கான பலன் கிடைக்கிறது. நண்பருடன் திருவாசகம் படித்துக் கொண்டிந்தபோது நான் சொல்லிக் கொண்டிருந்த விளக்கத்தைக் கேட்ட ஒரு நாத்திகர் , " இந்தப் புத்தகத்தை எனக்கு வாங்கித் தருவீர்களா?" என்று கேட்டார். மறுநாளே வாங்கித் தந்தேன். அன்று முதல் அவர் தீவிர ஆத்திகர் ஆகிவிட்டார். அவ்வாறு அவரை ஆன்மீகவாதியாக்கிய பெருமை திருவாசகத்தையே சாரும்.

கதைகளும் புராணங்களும் கட்டுக் கதை என்று அவற்றைக் கேளாமல் அலட்சியப்படுத்துபவர்கள் , இன்றைய காலத்திலும் திருவருள் துணையாக நிற்பதை அனுபவம் மூலமாகத் தெரிந்துகொண்டு திருந்தி வாழ வேண்டும் என்ற எண்ணத்தாலே , துளியும் மிகைப்படுத்தாமல் எழுதப்பட்டது இச்சிறு தொகுப்பு. அன்பர்கள் இறையருள் பெறுக.